செய்தி வெளியீடு எண் : 13 நாள் : 03.01.2024

**பிளஸ் 2 தேர்வில் 600/600 மதிப்பெண் பெற்ற கட்டுமான தொழிலாளி மகள் செல்வி.நந்தினிக்கு சிறப்பு ஊக்கத்தொகை ரூ.3,00,000/- க்கான காசோலையினை மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.சி.வி.கணேசன் அவர்கள் வழங்கினார்கள்.**

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில், திண்டுக்கல் மாவட்டத்தில், பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளி திரு.சரவணகுமார் ஆவார். அரவது மகள் செல்வி. நந்தினி 2022-2023 ஆம் கல்வி ஆண்டில் பிளஸ் 2 தேர்வில் 600/600 மதிப்பெண் பெற்று சாதனை படைத்துள்ளார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி செல்வி.நந்தினிக்கு புத்தகசெலவு, தனிப்பயிற்சி (Special Tuition). உடை, போக்குவரத்து உள்ளிட்ட இதர வாழ்வாதார செலவினங்களுக்கு ரூ.3,00,000/- (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) சிறப்பு ஊக்கத்தொகையாக தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரிய நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கி அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

இன்று (03.01.2024) தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சி.வி.கணேசன் அவர்களும், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய தலைவர் திரு.பொன்குமார் அவர்களும் செல்வி.நந்தினிக்கு சிறப்பு ஊக்கத்தொகை ரூ.3,00,000/- க்கான காசோலையினை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.குமார் ஜயந்த், இ.ஆ.ப., அவர்கள் முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையர் முனைவர் அதுல் ஆனந்த், இ.ஆ.ப., அவர்கள் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய செயலாளர் திருமதி ஆர்.செந்தில்குமாரி அவர்கள், ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in